# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2023.06.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


# மாநகர சபைகள் (திருத்தம்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜயந்த கெட்டகொட அவர்களால்
பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மாநகர சபைகள் (திருத்தம்)*

## *(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்*

**2**. 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தச்) சட்டத்தின் (252 ஆம் அத்தியாயமான) 10(2)ஆ பிரிவிற்கு உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு சேர்க்கப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 10(2)இ பிரிவாக பயனுடையதாதல் வேண்டும்:-

*252 ஆம் அத்தியாயத்திற்கு 10(2)இ எனும் புதிய பிரிவினை சேர்த்தல்*

"(இ) உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலொன்றை நடாத்துவதற்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நாட்டிலே ஏற்பட்டுள்ள யாதேனுமொரு நெருக்கடியான நிலை காரணமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவாறு குறித்த தேர்தலை நடாத்துவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை எழுந்துள்ள சந்தர்ப்பத்தின் போது, மேற்படி 10(2)ஆ கட்டளையின் பிரகாரம் அமைச்சர் அவர்களினால் பதவிக்காலம் நீடிக்கப்பட்ட கால எல்லை 12 மாதங்களைத் தாண்டியுள்ள போதிலும் கூட அமைச்சர் அவர்களினால் தீர்மானிக்கப்படுகின்ற மேலுமொரு காலப்பகுதிக்கு குறித்த கலைக்கப்பட்ட அதிகாரசபையை மீண்டும் கூட்டுவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.".

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*